# அன்னை மரியாள்

அன்னை மரியாள் 1917-ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா நகரில் மூன்று சிறுவர்களுக்குக் காட்சியளித்த நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் நாடுகள் தோறும் அனுசரிக்கப் பட்டு, இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 13-ஆம் நாள் விழாக் கோலத்துடன் முடிவடைந்தன. அன்னையால் உலகனைத்திற்கும் அமைதி, அவளின் அரவணைப்பினுள் அனைவருக்கும் பாதுகாவல், தன் பரிந்துரையால் வானின் வரங்களை எமக்குப் பெற்றுத் தந்து, எம் தேவைகளில் பக்க பலமாக நிற்பவள் விண்ணின் அன்னை தேவ மாதா என்று லிஸ்பன் நகர்ப் பேராயர் இவளைப் புகழ்ந்தார்.

வானதூதர் கபிரியேல் இவளை நாசரேத்தூரில் சந்தித்து இவளை வாழ்த்தியதாக நற்செய்தி எமக்குக் கூறுகின்றது. கபிரியேல் சம்மனசானவர் இவளுக்கு நற்செய்தி அறிவித்த போது சொப்போனியா இறைவாக்கினரின் வசனங்களை மீண்டும் எடுத்துரைக்கின்றார்:

பல நூற்றாண்டுகளுக்கு முன் யெருசலேம் நகர் முற்றுகையிடப் பட்டு மக்கள் கலங்கிய நேரத்தில், சொப்போனியா இறை வாக்கினர் அந்நகரை நோக்கிக் கூறிய இறை வசனம் இதுவே: "*சீயோனின் மகளே, நீ மகிழ்ச்சி கொள்! ஆண்டவர் உன்னுடனே! நீ அஞ்ச வேண்டாம். ஏனெனில் இரட்சணியத்தின் ஆண்டவர் உன்னுள்ளே இருக்கின்றார்.*" (சொப். 3:14-17). மரியாளின் இல்லத்தினுள் தோன்றிய வான தூதர் சொப்போனியாவின் இந்த இறைவாக்கினை மீண்டும் எடுத்துரைத்து, அதனை மரியாளின் நிலைக் கேற்ப அவளுக்கேற்ற விதமாக மாற்றுகின்றார்:

"*அருள் மிகப் பெற்றவரே வாழ்க! கர்த்தர் உம்முடனே... நீர் அஞ்ச வேண்டாம். ஏனெனில் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்.*" (லூக். 1:28-30). எனவே நாங்கள் "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்ற செபத்தை உச்சரிக்கும் போது, வானதூதரின் வாழ்த்தினை மட்டும் உச்சரிக்கவில்லை. மிகப் பழைய தீர்க்க தரிசனங்களையும் கபிரியேல் தூதரின் வாழ்த்துடன் சேர்த்து உச்சரிக்கின்றோம். எப்படி எங்கள் மூதாதையர் காலத்திலிருந்து மனுக்குலம் காலங்காலமாக அவரையே நம்பி வாழ்கின்றது என்ற உண்மையை மீண்டும் இறைத் தந்தைக்கு நினைவு படுத்துகின்றோம்.

அதை அடுத்து எலிசபெத்தின் வாழ்த்தினை நாம் சேர்த்துக் கொள்கின்றோம். எம் அனைவரின் பிரதிநிதியாக திரு முழுக்கு யோவானின் தாயாகிய எலிசபெத்தம்மாள் மரியாளை நோக்கிக் கூறியது இதுவே: "*பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே. உம் திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப் பட்டவரே.*" (லூக். 1:42). தொடர்ந்து அவள் சொல்கின்றாள்: "*என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் பெற்ற பாக்கியம் தான் என்ன?*" (லூக். 1:43).

***அர்ச்சிஸ்ட மரியாயே,***
***சர்வேசுரனுடைய மாதாவே,***
***பாவிகளாயிருக்கிற எங்களுக்காக***
***இப்பொழுதும்***
***எங்கள் மரண நேரத்திலும்***
***வேண்டிக் கொள்ளும்.***
***னி ஆமேன்.***

பாவிகளாயிருக்கிற எங்களையும், எம்மை விட்டுப் பிரிந்து போன எம் உற்றார் உறவுகளையும் மரித்தோர் நினைவு நேரமாகிய இம் மாதத்தில் அன்னையின் மலரடியில் சமர்ப்பிக்கின்றோம். இனி அவர்களுக்கு இறைவனின் பாதத்தில் நித்தியஇளைப்பாற்றியும் முடிவில்லா இன்பமுமே மிஞ்சுவதாக.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**